DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.327/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-4 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.ஜோசப்மேரி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.அருள்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 to A4 absent. u/s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 16.10.2025

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஆர்எஸ் மங்கலம் பெரியார் நகரில்வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன்.இவ்வழக்கின் புகார்தாரர் எனது மகன் ஆவார். இவ்வழக்கின் 1 முதல் 4 எதிரிகளை எனக்கு தெரியும். எனது ஊர்க்காரர்கள் தான். அவர்கள் தற்போது இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. எனது மகன் பெயிண்டராக வேலை பார்த்து வருகிறார். எனது மகன் பிரபாகரனுக்கு எனது ஊரை சார்ந்த 3ம் எதிரி முரளி என்னும் பெண்ணுடன் பல வருடங்களுக்கு முன்பு திருமணம்நடைபெற்றது.

அதன்பின் எனது மகனும்3ம் எதிரி முரளியும் கருத்துவேறுபாட்டால் நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெற்றுவிட்டனர்.அதன்பின் எனது மகன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

2.இந்நிலையில் சுமார் 3 வருடங்களுக்குமுன்பு ஆவணிமாதம் தேதி நினைவில் இல்லை. எனது மகன் பெயிண்ட் எடுப்பதற்காக வீட்டிற்கு தனது இருசக்கர வாகனத்தில் வந்தபோது எனதுமகன் வேறு திருமணம் செய்ததை மனதில் வைத்து கொண்டு 3ம் எதிரி முரளிமற்றும் இவ்வழக்கின் பிறஎதிரிகளான ராஜா,ஆசிர்வாதம் மற்றும் பால்ராஜ் ஆகியோர்அருவாளை தூக்கி கொண்டு எனதுமகனை விரட்டி வெட்ட வந்தார்கள். உடனே எனதுமகன் பிரபாகரன் வண்டியை நிறுத்திவிட்டு ஓடிவந்தார். அதன்பின் எதிரிகள்அனைவரும்சேர்ந்து எனது மகன் பிரபாகரனை இருசக்கர வாகத்தை வைக்கோல் வைத்து எறித்துவிட்டனர். இச்சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். இச்சம்பவம் குறித்து எனது மகன் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கின் 3ம் எதிரி சுரேஷ்முரளியும் எனது மகனும் தங்களது சுய விருப்பம் மற்றும் பெற்றோர்களின் சம்மதத்தின் பேரில் தான் திருமணம்செய்து கொண்டனர் என்றால் சரிதான். எனது மகனுக்கும் 3ம்எதிரிக்கும் 11.09.2002 ஆண்டு இருதய ஆண்டவர் ஆலயத்தில் வைத்து திருமணம் நடந்தது என்றால் சரிதான். மேற்படி எனது மகனும் 3ம் எதிரியும் திருமணம் முடிந்த பிறகு பெரியார் நகரில்தான் வாழ்ந்து வந்தனர் என்றால் சரிதான். எனதுமகனுக்கும் 3ம் எதிரிக்கும் திருமண வாழ்வில் குழந்தை இல்லை என்றால சரிதான். எனது மகன் 3ம் எதிரியுடன் திருமணம் ஆன பிறகு மலேசியாவிற்கு சென்றார் என்றால் சரிதான்.

2. எனது மகனுக்கு மலேசியா செல்லும்போது 3ம் எதிரி வீட்டில் இருந்து உதவி செய்தனர் என்றால் சரிதான். கொஞ்சம் உதவி செய்தனர். மேற்படி எனது மகன் மலேசியா சென்ற பிறகு அவருக்கும் 3ம் எதிரிக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட துவங்கியது என்றால் எனக்கு தெரியாது. எனது மகன் மலேசியாவில் எத்தனை

வருடங்கள் இருந்தார் என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை. எனது மகன் என்னுடன் மலேசியாவில் இருந்த காலத்தில் பேசமாட்டார் என்றால் சரிதான். எனது மகனின் குடும்ப பிரச்சனை எனக்கு தெரியாது என்றால் சரிதான். பெரியார் நகரில் நாங்கள் தனியாகவும், எனது மகன் குடும்பம் தனியாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனது மகனும் 3 ம்எதிரியும் பெரியார் நகரில் குடியிருந்த வீடு அரசாங்கம் கட்டி தந்த பசுமை வீடு என்றால் சரிதான். மேற்படி எனது மகன் குடியிருந்து வீடு அமைந்துள்ள இடம் 3ம் எதிரிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல எங்களுக்கு சொந்தமானது.

3. எனதுமகன் 3ம் எதிரியுடன் நீதிமன்றத்தின் மூலம் கொரனா காலத்தில் தான் விவாகரத்துபெற்றார் என்றால் சரிதான். மேற்படி கொரனா காலம் முடிந்த பின் 3ம் எதிரி விவாகரத்து உத்தரவை ரத்துசெய்ய கோரி மனுதாக்கல்செய்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனது மகன் ஆர்எஸ்மங்கலத்தில் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். எனதுமகன் ஆர்எஸ் மஙகலத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் யாருடன் குடியிருந்து வந்தார் என்றால் கடக்கனுார் சந்தியாகு மகளுடன் குடியிருந்து வந்தார் அவரது பெயர் தற்போது நினைவில் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் பெரியார்நகரில் உள்ள எனது மகனும் 3ம் எதிரியும் வசித்து வந்த வீட்டில் யார் இருந்தார் என்றால் யாரும் இல்லை அதற்கு முன்பாகவே 3ம் எதிரி அவ்வீட்டில் இருந்து போய் விட்டார்.

4. எனதுமகன் என்னுடன் மலேசியாவில் இருக்கும் போது பேசுவது இல்லை என நான் விசாரணையில் தெரிவித்துள்ளேன்.அதன்பின் எப்போது பேச தொடங்கினார் என்றால் எனக்கு தெரியாது. எனது மகனையும்அவர் தற்போது ஆர்எஸ் மங்லத்தில் வசித்து வரும் பெண்ணையும் சேர்த்து எங்களது வீட்டில் வைத்துக்கொள்ள நான் நடடிவக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.இனிமேல் தான் எடுக்க வேண்டும். சம்பவம் நடந்ததாக சொல்லப்டும சமயத்திற்கு முன் 3 எதிரி என் மீதும் என் மகன் மீது காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி புகார்அளித்த பின்பு தான் என் மகன் ராமநாதபுரம் நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு

தாக்கல்செய்தார் என்றால் சரிதான். 3ம் எதிரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் என் மீது நடடிவக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் எனதுமகன் எந்த வாகனத்தில் எங்கள் வீட்டிற்கு வந்தார் என்றால் எனக்கு தெரியாது.

5. பெரியார் நகரில் எத்தனை வீடுகள் உள்ளன என்றால் சுமார் 60 வீடுகள் உள்ளன. ஆர் எஸ்மங்கலத்திலிருந்து பெரியார் நகருககு வரும்ரோடு தெற்கிலிருநது வடக்கு நோக்கி வரும் ரோடு என்றால் எனக்கு தெரியாது. எனதுமகனும் 3ம் எதிரியும் குடியிருந்த வீடு எங்கள் வீட்டிலிருந்து எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் பக்கம்தான் எவ்வளவு துாரம் என்று தெரியாது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அவ்விடத்தில் பொது நபர்கள் யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலிசார் சம்பவ சமயத்தில் எங்கள் ஊருககு வந்து எனது மகனை தான் சத்தம்போட்டுவிட்டு சென்றனர் என்றால் எனது மகனையும் சத்தம் போட்டனர். எதிரிகளையும் சத்தம்போட்டனர்.

6.3ம் எதிரி எங்கள் மீது கொடுத்த புகாரை மனதில் வைத்து கொண்டு எனது மகன் தான் எதிரிகளுடன் வீண் தகராறில் ஈடுபட்டார் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னவாறு எதிரிகள் எனது மகனுடன் எந்த பிரச்சனையிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எனதுமகன் அவரது இருசக்கரவாகனத்தை தானாகவே எறித்து கொண்டதால் தான் எனது மகனை போலிசார் சத்தம்போட்டனர்என்றால் சரியல்ல. எனதுமகன் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் தனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு எங்கு ஓடினார் என்றால் காவல்நிலையத்திற்கு ஓடினார். சம்பவத்தை குறித்து போலிசாரிடம் யார் தகவல் சொன்னார் என்றால் நான் தான் போன் மூலம் தகவல் சொன்னேன். சம்பவம்நடந்ததாக சொல்லப்படும மறுநாள் நான் காவல்நிலையம் சென்றேன். நான் கொடுத்த புகாருக்கு போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

7. அதன்பிறகு ராமநாதபுரம் காவல் கண்காணிப்பாளரிடம் எனது மகன் புகார் கொடுத்தார்.அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு சொன்னதேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் ஏககாலத்தில் இருந்தே நானும் எனது மகனும்பேசி கொள்வதில்லை என்றும் எனதுமகன் ஊருக்கு வந்தபோது எதிரிகள் அவனை தாக்க வந்து அவரது இருசக்கர வாகனத்தை எறித்ததாகவும் மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்ததாகவும் பொய்யாக சாட்சியம் அ ளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.